உ

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# கழுகுமலைப் படைவீட்டுப் பதிகம்
# கழுகுமலைப் படைவீட்டுத் திருப்புகழ்





மூலநூல் ஆசிரியர் : வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

உரையாசிரியர் : முனைவர் வெ.சத்தியநாராயணன் அவர்கள்



வெளியீடு : க.முருகன் அவர்கள்

கழுகுமலை பிரதோஷக்குழு, கழுகுமலை



ஸ்ரீ

மகான் "வண்ணச்சரபம்"
தண்டபாணி சுவாமிகள் இயற்றி அருளிய

# கழுகுமலைப் படைவீட்டுப் பதிகம்
# கழுகுமலைப் படைவீட்டுத் திருப்புகழ்

(மூலமும் உரையும்)

(சுவாமிகள் குறித்தருளிய முருகவேளின்
36 படைவீடுகளில் 10-ஆம் படை வீடு)


உரையாக்கம்

முனைவர். **வெ.சத்யநாராயணன்** அவர்கள்
உதவிப் பேராசிரியர்,
மன்னர் சரபோசி அரசு கல்லூரி, தஞ்சாவூர்.



வெளியீடு

**குகஸ்ரீ. க.முருகன்**
கழுகுமலை பிரதோஷக் குழுத் தலைவர்,
கழுகுமலை.

## நூல் விபரங்கள்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | கழுகுமலைப் படைவீட்டுப் பதிகம்<br>கழுகுமலைப் படை வீட்டுத் திருப்புகழ் |
| நூலாசிரியர் | : | மகான் ''வண்ணச்சரபம்''<br>தண்டபாணி சுவாமிகள் |
| நூலின் வகை | : | துதிநூல் |
| முதற்பதிப்பு | : | 4-11-2021 ஐப்பசி கந்தசஷ்டி |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கங்கள் | : | 24 |
| தாள் | : | 16 கி.கி. மேப்லித்தோ |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| படிகள் | : | 500 |
| விலை | : | ரூ. 20/- |
| நூல் அமைப்பு | : | ஸ்ரீகணநாத நாயனார் நூலகம்,<br>திருச்சிராப்பள்ளி. |
| பிரதிகள் கிடைக்குமிடம் | : | குகஸ்ரீ க.முருகன்<br>கழுகுமலை<br>செல் : 94868 57623 |
| அச்சாக்கம் | : | ஆர்.ஜி.பிரிண்டர்ஸ்<br>சின்னக்கடைத்தெரு,<br>திருச்சிராப்பள்ளி-2.<br>போன் : 0431-2700417, செல் : 9894908437 |


**அன்பர்களுக்கு அன்பான வேண்டுகோள் :**

**இந்நூலினைப் பெறும் அன்பர்கள் அவசியம் படித்து பயன்கொள வேண்டுகிறோம்.**



உ

திருச்சிற்றம்பலம்


**முனைவர். வெ.சத்யநாராயணன்**

உதவிப் பேராசிரியர், மன்னர் சரபோசி அரசு கல்லூரி, தஞ்சாவூர்.


## முகவுரை

தென்பாண்டி மண்டலத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால கட்டத்திலிருந்தே புகழ்பெற்ற ஒருபகுதி கழுகுமலையாகும். இராமாயண காலத்தில் கழுகரசன் ஜடாயுவின் சகோதரன் சம்பாதி இங்கு வாழ்ந்து வந்ததால் இம்மலை கழுகுமலை எனும் பெயர் பெற்றது என்பர். தென்பழனி, உவணகிரி, கஜமுக பர்வதம் எனப் பலவாறு குறிக்கப்படும்.

வரலாற்றியல் ஆய்வாளர் கருத்துக்களின்படி, தொல் பிராமிக் கல்வெட்டுக்கள் கிடைத்த இடங்களில் கழுகுமலையும் ஒன்று. பின்னாளைய சமணர் படுகைகளும் இங்குக்காணப்படுகின்றன. பல்லவர்காலக் குடைவரைக் கோயில்கள் இப்பகுதியின் கலைச்சின்னங்களாக மிளிர்கின்றன. கழுகுமலை வெட்டுவான் கோயிலும், முருகப்பெருமான் குடைவரைக் கோயிலும் அந்நாளைய கலைகளுக்கு அருஞ்சான்றுகளாக அவிர்கின்றன.

காஞ்சிபுரம் - சிதம்பரமுனிவர் அருளிச்செய்த சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழில் கழுகுமலை, செங்கீரைப்பருவப் பாடலில் இடம் பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு :

கடலேழை யும்பழைய கங்கைப் பெருக்கெனக்
காலிலொரு சிறுவிரலினால்
கடலொன் றெனச்செய்து கடையுகத் தேபுறக்
கடனீரை யுள்ளடக்கும்
வடவா முகாக்கினியை யுள்ளடக் கிப்பின்பு
வடவையை யெழுப்பியந்த
வாரிநீ ரைப்பெருக வைத்துவிளை யாடநீ
வானவர்கள் கண்டஞ்சியே

இடர்தீர அருளென் றிரப்பவே முன்போல
எழுகடலும் வடவையனலும்
இருந்தபடி யேயிருந் திடவைத்து வீரருடன்
எண்டிசையும் விளையாடல்செய்
திடமான அதிபல மகாவீர முருகனே
செங்கீரை யாடியருளே
தென்கழுகு மலைமேவு மின்குலவு வேலனே
செங்கீரை யாடியருளே.

அருணகிரிநாதர், காவடிச்சிந்து பாடிய சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் எனப் பல புலவர்கள் பாடிய தலம்இது; இவர்களே பாடியனவே அல்லாமல் எட்டையபுரம் காளிப்புலவர் பாடிய கழுகுமலை பிள்ளைத் தமிழ், சிதம்பரக் கவிராயர் பாடிய கழுகுமலை பிள்ளைத்தமிழ், சிறிய சரவணப் பெருமாள் கவிராயர் பாடிய கழுகுமலை ஒரெழுத்து அந்தாதி, மீனாட்சிசுந்தரக் கவிராயர் பாடிய கழுகுமலைத் திரிபந்தாதி, கழுகுமலைப்பதிகம், மணிவாசக சரணாலய அடிகள் என்ற மதுரகவி ஆண்டவர் சுவாமிகள் பாடிய கழுகுமலைப் பதிகம், கடிகை நமச்சிவாயப் புலவர் பாடிய வல்லீபரதம், முத்துசாமி தீட்சிதரின் கீர்த்தனைகள் ஆகிய பல பனுவல்கள் இத்தலத்து இறைவனைப் போற்றுகின்றன.

மெய்வழிச்சாலை ஆண்டவர் நெறியைப் போற்றும் 'ஊறல் மலைக்குறமங்கை' எனும் நூலிலும் இத்தலம் இடம் பெற்றுள்ளது.

## 'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகள்

அகிலம் புரக்கும் இறைவனின் வடிவங்களில் பேதமற்று ஒன்றெனக் கொண்டு வழிபட்ட ஞானியருள் 'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகளும் ஒருவர். திருநெல்வேலியில் பிறந்து பண்டைய நாயன்மார் ஆழ்வாராதியர்களைப் போலத் தாமும் பல தலங்கள் தோறும் சென்று அங்கு வீற்றுறையும் இறைவன் மூர்த்தங்களைப் பாடிப் பரவிய மகான். முருகனை இட்ட தெய்வ மாகக் கொண்டாலும் ஏனைய மூர்த்தங்களின் பெருமையை



சமரசமாகவே கொண்டு ஒருபரம்பொருளின் வேறுவேறு வடிவங்களே மூர்த்த பேதங்கள் என்று தெளிந்தவர்.

அத்தகைய தமிழ்ப்பெரியார், தண்டபாணி சுவாமிகள் கழுகுமலை பற்றிப் பாடிய பாடல்கள் ஒருபதிகமும் ஒரு திருப்புகழும் ஆம். இரண்டு பிரபந்தங்களும் சேர்த்து, 13 பாடல்களை உடையன. குகன் தன்னை ஆதரிக்க வேண்டும், தான் வெட்டிய கிணற்றில் நீரூற்றுப் பெருக வேண்டும் என்னும் கருத்தில் இத்தலத்து இறைவனைப் பாடியுள்ளார். மேலும் முன்னை அடியார் பெருமைகளையும் நினைந்து பரவுகின்றார்.

**வண்ணச்சரபம் பாடிய இப்பிரபந்தங்களில் அடங்கியுள்ள செய்திகள் வருமாறு :**

**முருகன்** : மால்மருகன்-1; வள்ளிநாயகன்-1, திருப்புகழ்; தெய்வயானை மணாளன்-திருப்புகழ், வேற்கையான்-1; ஈசன் திருநுதலிற் பிறந்தவன்-2, 11, திருப்புகழ் ; உமைப்பால் வேண்டி அழுதவன்-3; உமைபாலன்-4; முட்டை எனும் பெயரில் வேடனாகச் சென்று கவியேற்றது-4; கவிபாடியது-5; மயில் வாகனன்-5, 7, திருப்புகழ்; மலைபிளந்தவேலான்-6, 10; கடல்கலக்கி, சூர்தடிந்தவேலான்-9; மன்மதனைவிட அழகிய உருவன்-8; கடப்பந்தாரன்-10; சேவற்கொடியினன்- 10; குருவடிவாகஅருள்பவன்-11.

**சிவபெருமான்** : ஆலமர்செல்வன்-2; எல்லாப் பொருள் களிலும் நிறைந்தவன்-6; பிறைசூடியவன்-11; காலனைக் காய்ந்தவன்-திருப்புகழ்.

**ஏனைத்தேவர்** : திருமால் அவுணர்குல கலகன்-திருப்புகழ், திரௌபதிக்கு அருளியமை- திருப்புகழ்; மன்மதன்-8, திருப்புகழ்; கங்கை-12; எமன் - திருப்புகழ்.

**வண்ணச்சரபர்** : தான் சுவடிகளை எறிந்தமை - 2; கிணறு தோண்டி வருந்தியமை - 3, 7, 10, 11, 12; வண்ணப்பாக்களின் உயர்வு கூறல் - 7; திருநெல்வேலி எனும் ஊரினர் - 12.

**ஏனைஅடியார்** : மாணிக்கவாசகர்-3, பொய்யாமொழிப் புலவர்- 4, 5, திருஞானசம்பந்தர்- 8.

## நன்றியுரை

அன்புடையீர், வணக்கம். ''கழுகுமலைப் படைவீட்டுப் பதிகம் - ''கழுகுமலைப் படைவீட்டுத் திருப்புகழ்'' என்கிற இந்நூலினை வெளியிட வைத்த திருவருளுக்கும் வணக்கங்கள், நன்றிகள்.

'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகள் படைத்த இலக்கியங்களில் ஆராயுமாறு என்னைத் தொடர்ந்து ஊக்கப் படுத்தி வரும் சிரவையாதீனம் குருமஹாசன்னிதானத்தின் திருவடிகளை வணங்குகின்றேன். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பாக்களை எனக்கு அறிமுகப்படுத்திய பெரும் புலவர் ப. வெ. நாகராசன் அவர்களை நினைந்து போற்று கின்றேன்.

தம் ஊர் கழுகுமலை குறித்த 'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகள் அருளிய பிரபந்தங்களை உரையுடன் நூலாக வெளியிட வேண்டும் என்பதில் பெரும் ஈடுபாடு காட்டியவர் கழுகுமலை அன்பர் திரு. க.முருகன் அவர்கள். அவருடைய எண்ணத்தை உணர்ந்து இறைவன் இப்பணியில் தூண்டியுள்ளான் எனில் மிகையன்று.

நூலிற்கு வாழ்த்துரை வழங்கியுதவிய கோயம்புத்தூர் - கௌமார மடாலயம் - முனைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் அவர்களுக்கு வணக்கங்கள் - நன்றிகள்.

அணிந்துரை வழங்கியுதவிய மதுரை - முனைவர். நெல்லை. ந. சொக்கலிங்கம் ஐயா அவர்களுக்கும்,

நூலினை பதிப்புச் செய்து உதவிய திருச்சிராப்பள்ளி - மருத்துவர் கோ.முரளிதரன் அவர்களுக்கும்,

இந்நூலினை அழகுற அமைத்துக் கொடுத்த திருச்சிராப்பள்ளி ஸ்ரீகணநாதநாயனார் நூலகத்தினருக்கும், நூலினை அழகுற அச்சிட்டுக் கொடுத்த திருச்சிராப்பள்ளி ஆர்.ஜி.பிரிண்டர்ஸ் உரிமையாளருக்கும் என் நன்றிகள் உரியது.



உ

குருவே துணை

வளமுடன் வாழ! வரமருள் வேலா!!

**முனைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்**

மடாதிபதி, சிரவணபுரம், கௌமார மடாலயம், கோயமுத்தூர்.

## ஆசியுரை

*பாவை அனையார் மொழி வழிப்போம் படிறேன் எனினும் பரவுநர்க்குத்*
*தேவை முழுதும் தருமுனருள் திருத்தொண்டரைப் போல் திகழ்கின்றேன்*
*காவை வெருளப் படுத்தியகல் கடலைக் கலக்கிக் கறுவுசின*
*மாவை வகிர்ந்த முனைவேலா வளரும் கழுகு மலையானே!*

*தவத்திரு. தண்டபாணி சுவாமிகள்*

தென்பாண்டி மண்டலத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே பெருமை பெற்ற தலமாக விளங்கியது கழுகுமலை ஆகும். இத்தலத்தின் சிறப்புகளை அருணகிரிநாதர், காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், சிதம்பரக் கவிராயர் எனப் பலர் பாடி இருப்பினும் நூறுஆயிரம் பாடல்களுக்கு மேல் இயற்றிய தாத்தா சுவாமிகள் என அன்புடன் அழைக்கப்படும் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய கழுகுமலை பதிகப் பாடல்களை வெளியிட்டிருப்பது சிறப்புக்குரியது.

கௌமாரம் எனும் முறையைப் பின்பற்றி அறுசமய வழிபாட்டினையும் மேற்கொண்டவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். எவ்வித பேதமின்றி பல தலங்களுக்குச் சென்று இறைவனின் பெருமையைப் பாடியுள்ளார். இத்தகைய சிறப்புப் பெற்ற தவத்திரு. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் கழுகுமலை பற்றி பாடிய பாடல்கள் ஒரு பதிகம், ஒரு திருப்புகழ், இரண்டு பிரபந்தங்களும் சேர்த்து 13 பாடல்களை உள்ளடக்கி இந்நூல் வந்துள்ளது. மேலும் இப்பாடல்கள் யாவும் உரையுடன் அமைந்துள்ளது சிறப் பாகும்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் படைத்த இலக்கியங் கள் மீது ஆர்வம் கொண்ட இந்நூல் பதிப்பாசிரியர் கழுகுமலை குகஸ்ரீ க.முருகன் அவர்கள் இந்நூலினை வெளியிடுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது. கழுகுமலை முருகப் பெருமானின் புகழ்பாடும் கழுகுமலைப்பதிகம் என்னும் இந்நூலை வெளியிடும் பதிப்பாசிரியரான கழுகுமலைப் பிரதோச குழுத் தலைவர் குகஸ்ரீ. க. முருகன் அவர்களின் ஆன்மீகப் பணியும் இலக்கியப் பணியும் சிறக்க தமிழ்க் கடவுள் தண்டாயுதபாணிக் கடவுளின் திருவருளையும் ஆதிகுருமுதல்வர் தவப்பெருந்திரு. இராமானந்த சுவாமிகளின் குருவருளையும் சிந்தித்து வாழ்த்து கின்றோம்.

*வாழ்த்துக்களுடன்*
***குமரகுருபர சுவாமிகள்***



தமிழ்மொழிக் குயர்மொழி தரணியி லுளதெனில்
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே
- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், அறுவகை இலக்கணம். (நூ.705)

**முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம்**

பொதிகை
76/2, இராதாகிருட்டிணன் வீதி
நாகமலைப்புதுக்கோட்டை
மதுரை - 625 019
பேசி: 0452 - 2458571
செல்லிடப் பேசி: 99400 84364
மின்னஞ்சல்: nellai.n.chockalingam@gmail.com

தமிழ்ப் பேராசிரியர் (பணி நிறைவு)
மற்றும் ஒருங்கிணைப்பாளர்
இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியல்
தொலைநிலைக் கல்வி இயக்ககம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

## அணிந்துரை

கழுகுமலை வீற்றிருந்து அருள்பாலிக்கும் கழுகாசல மூர்த்தியின்பால் ஆராத அன்பும் இறைப்பற்றும் கொண்ட பெருந்தகை திரு.முருகன் அவர்கள். முருகப்பெருமானின் அருள் திறத்தை அகிலம் எங்கும் பரப்பிவரும் தொண்டர் திரு.முருகன் கழுகுமலைத் திருவள்ளுவர்கழகச் செயலாளராகப் பணியாற்றி இலக்கியத் தொண்டிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நல்லுள்ளம் கொண்ட நயம் மிக்கவர். மேலும் தம் தலைவலியை போக்கியருளிய கழுகுமலை முருகனை வண்ணச்சரபம் தண்டபாணி *(1839-1898)* சுவாமிகள் அம்மலை முருகப் பெருமான்மீது கழுகுமலைப்பதிகம் பாடிப்பரவியுள்ளார். இதுவரை அச்சாகாமல் இருந்த கழுகுமலைப் பதிகத்தை, ஏட்டுச் சுவடியில் இருந்து முனைவர் வெ.சத்தியநாராயணன் அவர்களால் படி எடுக்கப்பட்டு, அவரையே உரையும் எழுதுமாறு செய்து, மருத்துவர், திரு. கோ.முரளிதரனார் வாயிலாக அச்சிட்டு வெளிப்படுத்தும் அரும்பணியையும் செய்துள்ளார். சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்தைப் பரப்பும் திருத்தொண்டுடன் வண்ணச்சரபரின் கழுகுமலைப் பதிகத்தையும் வெளிக்கொண்டுவரும் திரு.முருகன் அவர்களின் அருள்தொண்டு சிறக்கவும், மேலும் இப்படிப்பட்ட இறை பணிகள் தொடரவும், இறையருள் துணைநிற்க வேண்டு கின்றேன். இவரின் பதிப்புத் தொண்டு சிறக்கவும், நற்பயனை நாளும் நல்கவும், வேண்டும் என நெல்லையப்பர் திருவருளை வேண்டுகின்றேன்.

வணக்கம்! நலமே நிறைக!

27.08.21



# கழுகுமலைப் படைவீட்டுப் பதிகம்

**(அறுசீர் விருத்தம்)**

அடியார் பலருள் ஒருவரும்செய்[து]
அறியாப் பிழைசெய்[து] அகங்கரிக்கும்
கொடியேன் எனினும் எனைத்தடுத்தாட்
கொண்டால் உனக்குக் குறைவருமோ
நெடியோன் மருகா புனங்காக்கும்
நீலக் குறத்தி மணவாளா
வடிவேல் அணிந்த புயத்திறைவா
வளஞ்சேர் கழுகு மலையானே! 1

**இதன்பொருள்:-** வளமுடைய கழுகுமலை அமர்ந்த தேவனே! நெடியோனாகிய திருமால் மருகனே! குறிஞ்சி நிலத்தில் தினைப்புனம் காக்கின்ற குறவர்குலப் பெண் வள்ளியின் நாயகனே! வடிவேலைத் தாங்கிய திருத்தோள் கொண்ட இறைவனே! நின்னடியார் பலருளர். அவர்களுள் ஒருவரும் செய்யாத பலபிழைகளைச் செய்து அகங்காரத்துடன் திரிகின்ற கொடியேன் நான்; என்றாலும் என்னைத் திருத்தித் தடுத்தாட் கொண்டால் உனக்குக் குறைவருமோ? (வராதன்றோ). ஆகவே என்னை ஆதரித்து அருள்செய்வாய். (எ.று.)

**விளக்கம்:-** மலைக்குறவர் கரிய நிறத்தர் என்பதால் நீலக்குறத்தி என்றார். அகங்கரித்தல் - நான் என்ற ஆணவத்துடன் திரிதல்; அகங்காரம் - நான் என்ற தன்மை; இங்கு வினை முடிபாய் வந்தது. அடியார் பிழை செய்யார்; எனவே அவருள்ளுள் ஒருவன் என்றதால் தான் செய்வன அறிந்து செய்யும் பிழைகள் அல்ல என்று உணர வைத்தார்.

பொல்லார் இகழ அகிலாண்டப்
பொய்கைப் புனலிற் போட்டதமிழ்
எல்லாம் எடுத்துத் தரும்பெருமை
எய்தாய் எனிலிங்[கு] எவனுய்வேன்

கல்லா லடியில் சிவநுதற்கண்
    கனலூ[டு] உதித்த கான்முளையே
வல்லார் பரவத் திகழ்கருணை
    வரதா கழுகு மலையானே! 2

**(இ-பொ.):-** கழுகுமலை அமர்ந்த தேவனே! பக்தியில் வல்லோராய் வணங்குபவர்களுக்கு அருளும் கருணையுடைய வரதனே! கல்லால மரத்து அடியில் அமர்கின்ற சிவபெருமானின் திருநுதலில் நெருப்பிலே உதித்த திருமகவே! தீயவர் என்னை இகழ்ந்துபேச மனம்வெறுத்துக் கடலில் போட்ட என் தமிழ்ப் பாக்கள் பலவற்றை மீட்டுத்தரும் பெரிய செயலைச் செய்யா விடில் இங்கு அடியேன் எவ்வாறு உய்தி அடைய முடியும்? (எ.று.)

**(வி-ம்.):-** சிவபெருமான் தென்முகக் கடவுளாய்க் கல்லால மரத்தடியில் வீற்றிருந்து சனகாதி முனிவர்க்கு அருள்பவன்; ஆகவே கல்லாலடியில் சிவன் என்றார்.

"**கல்லால்** நிழல்மேய கறைசேர் கண்டா என்று
எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த".
(தேவாரம் 1.85.1)

என்று ஞானசம்பந்தரும்,

"**கல்லால்** நிழன்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே".

என மெய்கண்டாரும்,

"**கல்லாலின்** புடையமர்ந்து நான்மறையா
    றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
    பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமா யிருந்ததனை
    யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமனினைந்
    துபவத்தொடக்கை வெல்வாம்".
(திருவிளை. கடவுள் 14)



எனப் பரஞ்சோதி முனிவரும் சிவபெருமான் கல்லால் நிழற்கீழ் அமைந்து அருளுதலைச் சுட்டுதல் காண்க.

முருகப்பெருமானுடன் ஏற்பட்ட ஊடல் காரணமாகத் தாம் பாடிய தமிழ்ப்பாக்களைக் கடலில் வீசி எறிந்து விட்டார். இவருடைய செயலைப் பிறர் பழித்துரைத்தனர் போலும்; இதனைப் 'பொல்லார் இகழ' என்பதால் உணரலாம். தாம் எறிந்த பாக்களைத் திரும்பப் பெறும் வேட்கையைப் பல பதிகங்களில் குறிப்பிட்டுள்ளார். இதனை அறுவகை இலக்கணத்திலும்,

"வண்ணம்முதல் பலபாடல் கடலில், ஆற்றில்,
வாவியில் செந் தீயில்இட்டேன்; மற்றும் பன்னூல்
விண்ணறிய மண்அறிய உலகத் தூடு
விளங்கவைத்தேன் நலங்கருதி" (அறுவகை. பாயிரம் 5)

தம்பாடல்களை நீரிலும் தீயிலும் இட்டதை எடுத்துரைக்கின்றார்.

"புணரி ஆதிய புனலினும் கனலினும்
யான்ஓர் நிமித்தத்து இட்ட பாடல்
தரத்தகும் புலவன் யாவன் எனினும்
அவன்பத மலர்த்துணை அமரும் என்சிரத்தே".
(அறுவகை 771)

என்ற நூற்பாவில் கடலிலும் தீயிலும் தாமிட்ட பாடல்களைத் தேடித்தரும் இயல்புடைய புலவனைத் தாம் வணங்குவதாகச் சுட்டுகின்றார். நுதல் - நெற்றி, இங்கு நெற்றிக் கண்ணை உணர்த்திற்று.

யானோ அதற்கு நாயகமென்[று]
    இயம்பும் ஒருவன் மொழிநிசமேல்
ஏனோ கருங்கல் தொடுமிளப்பம்
    எனைச்சார் தருமென்[று] இசையேனோ
மீனோங் கியகண் சிவைமுலைப்பால்
    விரும்பிக் கமல மிசையழுதாய்
வானோர் பலரும் தொழும்பரமன்
    மதலாய் கழுகு மலையானே! 3

(இ-பொ.):- மீன்போலும் திருக்கண்களையுடைய உமையம்மையின் திருமுலைப்பால் பருகும் விருப்பில் சரவணப் பொய்கைத் தாமரைமீது அழுதபிரானே! தேவர் பலரும் தொழப்படுபவனாய்ப் பரம்பொருள் சிவபெருமான் மகனாக விளங்கும் கழுகுமலை உறையும் பிரானே! மாணிக்கவாசகர் உரிமையுடன் சிவபெருமானிடம் ''நானோ உம்செயலுக்கு எல்லாம் ஒரு நாயகம்'' என்று உரிமையுடன் வேண்டினார்; அம்மொழி நிசமென்றால் நானும் கருங்கல்லைத் தோண்டி நீருற்றுக்காக உள்ளம் இளைத்தல்ஏன் என்னைச் சார வேண்டும் என்று உரிமையுடன் கேட்பேன் அன்றோ? (எ.று.)

(வி-ம்.):- இறைவன் புரியும் நாடகத்தில் நன்மைக்கும் தீமைக்கும் தாமோ ஒருபொருள்; யாவும் அவன் செயல் என்பது மாணிக்க வாசகர் வாக்கு. இதனைத் திருவாசகம் - குழைத்த பத்தில் வரும்,

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.

என்ற பாடலால் உணரலாம். இப்பாட்டில் நானோ இதற்கு நாயகமே என்று வினவுகின்ற பான்மையில் தானும் முருகனிடம் வினவுவேன் என்று உரிமையுடன் கேட்பதாகக் கூறுகின்றார் சுவாமிகள்.

முருகவேளின் அருளாணையினால் சுவாமிகள் நெல்லையில் கிணறு ஒன்றைத் தோண்டினார். அக்கிணற்றுப் பகுதி பெரும் பாறையாக இருந்தது. எதுவும் தன் செயலில்லை ஈசன் செயலே எனும் போது கடும்பாறையில் கிணற்றைத் தோண்டச் செய்ததும் அவன்ஆணையே ஆகும். அவ்வாறாயின் ஏன் கிணற்றில் நீர் பெருகவில்லை என்னும் ஆற்றாமையை இவ்வாறு உரிமையுடன் பதிவு செய்கின்றார்.

**சிலைக்கோன் முருடன் எனக்கானில்**
**சென்றோர் கவியேற்[று] அணிந்தாய்என்**
**சொலைக்கோ[து] எனநீத்[து] இருந்தனையேல்**
**தோடம் உனைச்சூழ் தருங்கண்டாய்**



**முலைக்கோ கனகமுகை துணையார்**
**மோகித்[து] அணைதோன் முருகையா**
**மலைக்கோன் உதவும் மகள்பயந்த**
**மைந்தா கழுகு மலையானே!** 4

(இ-பொ.):- தாமரை மொட்டனைய நகிலுடைய இருபெண்டிர் அணைகின்ற தோளுடைய முருகையனே! மலைக்கோன் இமவான் பெற்ற பார்வதியின் மைந்தனே! கழுகுமலை அமர்ந்த பிரானே! கையில்வில்லை ஏந்தி முரட்டு வேடனாகப் பொய்யாமொழிப் புலவர்முன் சென்று தன்மேல் ஒரு கவிபாடும்படி செய்தவனே! என் பாடலில் குற்றம் கருதி அவற்றை ஒதுக்கி விட்டால் உனக்கேபழி உண்டாகும். (எ.று.)

(வி-ம்.):- பொய்யாமொழிப் புலவர் பற்றிய செய்தி இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. பொய்யாமொழிப் புலவர் சிவபெருமானை மட்டும் பாடும் இயல்பினர். முருகனைப் பாடுமாறு அடியார் வேண்டியபோது, கோழியைப் பாடும் வாயால் குஞ்சைப் பாடுவேனோ என்று மறுத்து விட்டார்; ஒரு காட்டினிடையே புலவர் சென்று கொண்டிருந்தபோது குஞ்சைப் பாடேன் என்று கூறிய புலவர்முன் அதனினும் முன்னைய முட்டை என்று பெயருடன் முரட்டு வேடனாக முருகன் எதிர் சென்றான். முட்டை என்னும் தன்பெயர் தோன்றச் 'சுரம்போக்கு' எனும் துறையில் பாடும்படி வற்புறுத்தினான். புலவரும்,

''பொன் போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானலிலே
என் பேதை செல்லற் கியைந்தனளே - மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்
கானவேல் முள்தைக்கும் காடு''.

என்று பாடினார். அப்பாடலை மறுத்து முருகவேள் 'விழுந்ததுளி அந்தரத்தே' என்று தொடங்கும் பாடலையும் பாடினான். இந் நிகழ்வை, ''முற்பட்ட முரட்டுப் புலவனை முட்டை பெயர் செப்பிக் கவி பெறு பெருமாளே'' எனத் திருப்புகழும்,

"முட்டையென் பேர்சுரம் போக்கா வொருபா மொழியெனக் கேட்டு
இட்ட முறுபொய் யாமொழி பொன்போ லெனவுரைக்கச்
சுட்டழகில்லை யீதென்று விழுந்த துளியென்றுநன்
மட்டவிழ்தார் முருகோன்சொன்ன துங்கொங்கு மண்டலமே".

எனக் கொங்குமண்டலச் சதகமும் கூறுகின்றன. இந்நிகழ்வை வண்ணச்சரபம் சுவாமிகளும் தமிழலங்காரத்தில்,

"வேலையும் குன்றும் அவுணரும் தீயவை வேல்விடுத்து
சேலையொப்பாம் வழித் தெய்வானை தோள்புணர் சேந்தன் அந்நாள்
ஆலையின் பாகன்ன செந்தமிழ்ப் பாட்டொன்றின் ஆசையினால்
பாலையில் முட்டையெனப் போனவாறு படிசொலுமே".

என எடுத்து மொழிகின்றார்.

இவ்வாறு வலியச் சென்று ஒருபாடலுக்காக புலவரை இரந்து பெற்ற முருகவேள், தான் இவ்வாறு பல பாடல்களைப் பாடுகின்ற போதும் இரங்காமல் இருந்தால் அது அவனுக்குப் பழியாகிவிடும் என்று உரைக்கின்றார் சுவாமிகள். மேலும் அவர் இந்நிகழ்வை அடுத்த பாடலிலும் மொழிகின்றார். *(சொலை- சொல்லை, இங்குசொல்லான் அமைந்த பாடலைச் சுட்டினார். கோது - குற்றம், பிழை. தோடம் - தோஷம் என்னும் வட சொல்லின் தற்பவம்).*

**புண்பா(டு) உறும்என் கவிபலவும்**
**பொய்யா மொழிமுன் புகன்றுளதோர்**
**வெண்பா வினும்தாழ்(வு) எனச்சொன்னால்**
**வேறிங்(கு) எவருன் றனைப்புகழ்வார்**
**கண்பா வியசீர்க் கவிகைநிகர்**
**கவின்தோய் அகலப் பரியூர்வாய்**
**மண்பார் உலகில் இணையிலதாய்**
**மறுத்தீர் கழுகு மலையானே!** 5

(இ-பொ.):- கண்கள் பொலிந்து பரவிக் குடை போல் விரிந்து தோன்றும் தோகையுடைய பெரியமயிலை ஊர்தியாக உடையானே! மண்திணிந்த இவ்வுலகில் ஒப்பற்றதாயும் குற்றமற்றதாயும் விளங்கும் கழுகுமலையில் அமர்ந்த பிரானே!



என் மனத்துயர் விளங்க உன்மீது பாடுகின்ற எனது பாடல்களை நீ பொய்யாமொழிப் புலவர் முன் நீ பாடிய வெண்பாவினும் தாழ்வு எனச் சொன்னால் உன்னை எவர்தான் இங்கு புகழ்ந்து பாட வருவார்? (எ.று.)

(வி-ம்.):- பொய்யாமொழிப் புலவர் பாடிய பாடல் கருத்தை ஒவ்வாது முருகன் தான்ஒரு பாடலைப் பாடினான். தலைவி தலைவனுடன் சென்றபோது கள்ளிநெருப்பினால் வேகின்ற காட்டுவழியில் செல்கையில் முள்காலில் தைக்கும் என்னும் கருத்தமையப் பொய்யாமொழிப் புலவர் பாடினார். கள்ளி வெந்து எரியும் போது முள்ளும் எரியுமே. எப்படி காலில் தைக்கும்? என்று மறுத்தான் முட்டை எனும் பெயரினனாக வந்த முருகவேள். ஆகவே அவர்முன்,

"விழுந்த துளி அந்தரத்தே வேமென்றும் விழின்
எழுந்து சுடர்சுடு மென்றுஞ் - செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்துப் பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிபகைஞர் போல்".

என்ற பாடலைப் பாடினான். துளி ஆவியாகிடும் அல்லது தீச்சுடும் என்றஞ்சி மேகம் மழைபொழியாத காட்டில் பொய்யாமொழிப் புலவரின் புலமைக்கு அஞ்சிய பகைவர்கள் காட்டில் அஞ்சிச் செல்வதுபோல் தலைவி தலைவனுடன் சென்றாள் என்பது முருகவேள் பாடிய பாடலின் கருத்து.

புலவர் பாடலைக் குற்றம் காட்டித் தானொரு பாடலை முருகவேள் பாடினான். இவ்வாறே தன்பாடலிலும் குற்றம் கண்டு பிடித்துப்பாக்களை விலக்கி விட்டால் முருகனைப் பாடுவதற்கு எவர்தான் முன் வருவார்? என்று கூறுகின்றார் சுவாமிகள். இதனால் முருகவேள் முழுதுணர் புலவனாகும் தன்மையை நிந்தாதுதியாகப் பெற வைக்கின்றார்.

முருகவேள் பொய்யாமொழிப் புலவர் பாடிய வெண்பா வினும் தம் பாடல்கள் தாழ்வெனினும் அருள வேண்டியது அவன் பொறுப்பு; ஆகவே தம்பாடல்களுக்கு மனம் இரங்க வேண்டும் என்பது குறிப்பு. *(மறு-குற்றம், குறை, களங்கம்; கவிகை-குடை)*

உருப் பூரணங்கொண் டான்தவத்தால்
ஒளிரும் பொருள்நீ எனஉணர்ந்தும்
விருப்பூ ரவர்கைப் பொருள்மிசைப்போய்
வெதும்ப எனைநீ விடலாமோ
பொருப்பூ(டு) உருவத்தொடும் வேற்கை
போரே(று) அனைய புகழ்க்குமரா
மருப்பூங் கமலத் தடஞ்சூழ்சீர்
வயங்கும் கழுகு மலையானே! 5

(இ-பொ.):- மலையூடே பாய்ந்து உருவிச் செல்லும் வேலைக் கையில் கொண்ட போரேறு ஒத்த புகழை உடைய குமரனே! மணமுடைய தாமரைப்பூக்கள் நிறைந்த குளிர்ந்த நீர் நிலைகள் உடைய கழுகுமலையில் வீற்றிருக்கும் பிரானே! தோன்றும் வடிவங்கள் பலவற்றிலும் பூரணமாக நிறைந்துள்ள சிவபெருமான் தன் யோகத் தவத்தினால் அளித்த சோதி சொரூபம் நீயே என நான் உணர்ந்துள்ளேன். இத்தகைய அடியேனின் விருப்பம் ஊரார் கைப்பொருள் மேற்சென்று (அதுகிட்டாது) மனம் வெதும்புமாறு வருந்த விடலாமோ? (எ.று.)

(வி-ம்.):- பொருப்பூடு உருவத்தொடும் வேல் - மாயை உருவில் மலையாக நின்ற தாரகனைக் கொன்றமையைக் குறித்தது. தெய்வம் இவனெனத் தெளிந்தபின்னும் ஊரவர் கைப் பொருளுக்கு அலைய விடுதல் அத்தெய்வத்திற்குப் பெருமை சேர்க்காது; எனவே தனக்கு அருள்புரிதல் முருகவேளின் கடமை என உணர்த்துகின்றார். *(மரு-நறுமணம்).*

திண்ணப் படுபா றையிற்கிணறு
செய்கென்(று) உரைத்துத் தெளிநீருற்(று)
உண்ணக் கொடுத்தாண் டிலைஇதுநின்
உயர்ச்சிக்(கு) அழகோ உளமிரங்காய்
கண்ணக் கலப மயிற்பரியைக்
கதிர்வேற் படையைக் கருதிமகிழ்
வண்ணப் புலவர் புகழ்போலும்
வான்றோய் கழுகு மலையானே! 6



(இ-பொ.):- வண்ணக்கண்கள் பொலிந்த கலாப மயிலை ஊர்தியாகவும் சுடர்விடும் வேலைப் படையாகவும் கொண்டு மகிழ்பவனாய், வண்ணப்புலவர் கொள்ளும் புகழ்ச்சி போல வளர்கின்ற பெரிய புகழ்கொண்டு வானுயர்ந்த கழுகுமலையில் அமர்ந்த பிரானே! திண்ணென்ற உறுதியான பாறையில் கிணறு ஒன்றை அமைப்பாய் என்று கூறிய நீ, அவ்வாறே அக்கிணற்றில் தெளிந்த நீருற்று ஒன்று ஊறுமாறு செய்து எனை ஆளவில்லையே. இவ்வாறு செய்வது உன் பெருமைக்கு அழகாகுமோ? எனவே மனம்இரங்கி நீருற்றுப் பெருக அருள்வாய். (எ.று.)

(வி-ம்.):- பாறையிடத்தைக் காட்டிக் கிணறு ஒன்றை அமைக்க ஆணையிட்ட முருகன் அதில் நீருற்றுத் தோன்றச் செய்யாததால் ஏற்பட்ட தன் மனவருத்தத்தைப் பல பதிகங்களில் புலப்படுத்தியுள்ளார். அவனாணைப்படி கிணறு அமைத்தும் நீர் ஊறவில்லை என்றால் முருகவேளின் பெருமைக்குத்தான் அழகன்றே தவிரத் தனக்கில்லை என்பது கருத்து.

செய்யுள் வகைகளில் வண்ணப்பாடல் பாடுவது அரிது; ஆகையால் அந்த யாப்பில் பாடுகின்ற புலவருக்குச் சிறந்த புகழ் உண்டாகும். வண்ணத்தின் உயர்ச்சியையும் வண்ணப்பாடல் பாடும் புலவரின் உயர்ச்சியையும் சுவாமிகள் தம் வண்ணத் தியல்பு நூலில்,

வண்ணம் தேரார் வண்டமிழ்ச் சீர்
மதுநூல் கல்லா மன்னர்கைக் கோலும்
சத்திய மில்லார் தவமும் போலுமே. *(வண்ணத்தியல்பு-95)*

எண் வகைப் புலவர் திறலோரேனும்
வண்ணம் கூறும் வலியொன்றிலரேல்
கள்வரில் கலங்கும் கருத்தினோரே. *(மேலது-96)*

வண்ணச் செந்தமிழ் வளமை ஓர்ந்தோர்
நால்வகைப் புலவர் தம்முள் ஏறே. *(மேலது-97)*

உடுவினத்து அரசென மதியைக் கூறலும்
கவியினத்து அரசென வண்ணச் செந்தமிழ்
அதனைக் கூறலும் புரையும் அன்றே. *(மேலது-98)*

வண்ணத் தமிழ்ப்புலவர் வளர்புகழ்ப் பேற்றை
அன்னவர் தாமே அறிவர் மன்னோ. (மேலது-99)

எனப் பலபடப் பேசக் காணலாம். எனவேதான் கழுகு மலையின் புகழையும் பெருமையை வண்ணப் புலவர்களின் புகழோடு ஒப்பிடுகின்றார். வண்ணப்புலவர் கொள்ளும் புகழ் வான் தோய்வுறும் பெற்றியது; அதனை ஒப்பவே கழுகுமலையும் வான் தோய்வுறும் சிறப்பினது என்கின்றார்.

**சிலமந்தி கள்வான் தருமிசைப்போய்த்**
**திரும்பும் பொழிற்சீர்த் திகழ்காழிப்**
**புலவன் தனைப்போல் வாழுநலம்**
**புரிந்தால் உலகம் பொறுக்காதோ**
**கலகம் செயும்கண் மடவாருள்**
**கவின்தோய் கிளியிற் பவனிவரும்**
**வலவன் தினங்கண்(டு) உளம்நாணும்**
**வனப்பார் கழுகு மலையானே!** 8

(இ-பொ.):- கண்டார் மனத்தில் கலகத்தை உண்டாக்கும் விழியை உடைய பெண்டிர் படையிடையே அழகிய கிளிமீது உலாவரும் மன்மதன் நாளும் கண்டு மனம் வெட்கும் அழகிய வனப்போடு கழுகுமலை அமர்ந்த பிரானே! சில பெண் குரங்குகள் மரங்களின் உச்சிக்குச் சென்று திரும்பும் சோலைகளையுடைய சீகாழியில் பிறந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் போல வாழும் நல்ல வாழ்வுறும்படி அருள் செய்தால் உலகம் அதனை ஏற்காது வெறுத்து விடுமோ?; இல்லையன்றோ; (அந்தச் சம்பந்தர் பெற்ற பேறு அடியேன் பெற அருள்வாய்.) (எ.று.)

(வி-ம்.):- 'சிலமந்தி......திகழ்காழி' திருஞானசம்பந்தர் பாடிய,

'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்று அருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே'.
(தேவாரம் 1.130.1)



என்ற பாடலை நினைந்து பாடியது. ஐயாற்றில் நடனமாதர் நடமாடும் வகையில் முழவொலிக்கும்; அவ்வொலியை மழை மேகத்தின் இடியோ என்று அஞ்சித் தடுமாறும் மந்திகள் மரமேறி உச்சியேறி மேகங்களை நோக்கும். இந்தக் கற்பனை சுவாமிகளை ஈர்த்தது போலும். எனவே அதனை நினைந்து சம்பந்தரைக் குறிப்பிட விரும்பிய சுவாமிகள் சீகாழித் தலத்து வருணனையாக அமைத்துப் பேசுகின்றார்.

கலகம்.......வலவன் : பெண்டிரைப் படையாக உடையவன்; அழகிய கிளியை ஊர்தியாகச் செலுத்துபவன்; அழகிய வடிவுடையன்: மன்மதன். அவனே நாணும்வகையில் மூவா இளநலம் காட்டும் முருகன் எழிலைச் சுவாமிகள் எடுத்துரைக்கின்றார்.

**பாவை அனையார் மொழிவழிப்போம்**
**படிறேன் எனினும் பரவுநர்க்குத்**
**தேவை முழுதும் தருமுனருள்**
**திருத்தொண்ட ரைப்போல் திகழ்கின்றேன்**
**காவை வெருளப் படுத்தியகல்**
**கடலைக் கலக்கிக் கறுவுசின**
**மாவை வகிர்ந்த முனைவேலா**
**வளரும் கழுகு மலையானே!** 9

(இ-பொ.):- அரக்கரின் காவற்காட்டை அழித்து அகன்ற கடலைக் கலக்கி, பெருகிய சினத்துடன் மாமரமாய் நின்ற சூரனை இருகூறாக்கிய கூரியநுனிக் கொண்ட வேலை உடையவனே! புகழ் வளரும் கழுகுமலையில் உறையும் பிரானே! அழகிய பதுமை போலும் பெண்களின் மொழிக்கிரங்கி அவர் வழியே செல்லும் கீழானவன் என்றாலும் தொழுது வணங்கும் அடியவர்க்கு வேண்டியதெல்லாம் அருள்பவனாகிய உனது திருவடியாரைப் போலவே தோன்றுகின்றேன் அல்லனோ? (எ.று.)

(வி-ம்.):- 'பாவை.....திகழ்கின்றேன்' படிறன் - பொய்யன், வஞ்சகன்; பெண்டிர்வழி அலையும் மனத்தினன் எனினும் நல்ல அடியாரைப் போலவே புறவடிவில் திகழ்வதாகத் தம்மைக் குறிக்கின்றார். இது,

'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே
வீடுஅகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடை அறா அன்பு உனக்கு என்
ஊடகத் தேநின்று உருகத் தந்தருள் எம் உடையானே'.

(திருவாசகம் - திருச்சதகம். 15)

என மாணிக்கவாசகர் அடியாரின் உண்மைத்தன்மை தனக்கு இல்லையே இரங்கி மொழிவதுபோல மொழிந்ததாம்.

காவை வெருளப்படுத்துதல் : பகைவரின் காவற் காட்டை அழித்து முன்னேறுதல் பழந்தமிழ் மரபு;

முருகவேள் கடலில் வேலெறிந்தது: கந்தபுராணம், சூரசங்காரத்திலும் திருவிளையாடற் புராணம் வேலை சுவற விட்ட படலத்திலும் முருகவேள் தன் திருக்கைவேலைக் கடலில் எறிந்தமையைப் பேசும். மாவை வகிர்தல் - மாமரமாய் நின்ற சூரனைப் பிளந்தமை. கறுவு, சினம்: ஒரு பொருட் பன்மொழி.

**தெரியல் கடம்பா தியபோலும்**
**சிறியேன் தமிழென்(று) உரைத்துளநீ**
**கிரியிற் கிணறொன்(று) அமைக்கவிட்டுக்**
**கெடுத்தாய் அருட்சீர் கொடுத்தாள்வாய்**
**கரிபட்(டு) ஒருவெற்(பு) அறப்பொருதாய்**
**கமலன் முதன்மூ வருக்கிறைவா**
**வரிமிக்(கு) உளகால் சமர்ச்சேவல்**
**வளர்த்தாய் கழுகு மலையானே!** 10

(இ-பொ.):- கரியநிறமுடைய பெரிய மலையைப் போரிட்டு அழித்தவனே! பிரமன் முதலிய மூவருக்கும் மேலான தலைவனே! வரிகள் பொருந்திய கால்களை உடையதும் போர் புரிவதுமான சேவலைக் கொடியில் வைத்தவனாய்க் கழுகு மலையில் அமர்ந்தபிரானே! நீ, கடம்பு முதலிய மலர்களால் ஆன மாலை போன்று அடியேன் பாடும் தமிழ்ப் பாமாலை என்று முன்பே உரைத்துள்ளாய். (அவ்வாறிருக்க அடியேன் பாடும் பாக்களுக்கு இரங்காமல்) மலைப்பாறையில் கிணறு ஒன்றை அமைக்கவிட்டு எனது நிலைகெட்டு அழியுமாறு செய்தாய்; இனியேனும் உனது பேரருளை ஈந்தருள்வாய். (எ.று.)



(வி-ம்.):- கரிபட்டு ஒரு வெற்பு : கரி-கருமை, இருள்நிலை; இருள் மயமான மாயையால் தாரகன் நின்ற மலை வடிவத்தை உணர்த்தியது. கமலன் முதல் மூவர் : பிரமன், திருமால், உருத்திரன் எனும் மூவர்; பிரமன், திருமால் இந்திரன்-உருத்திரன் எனினும் அமையும். தெரியல்-மாலை; கிரியிற் கிணறு; கிரி - மலை; 'தலத்தூடு அமிழும் மலையில் கிணறு சமைத்து அயர்ந்தேன்' என்று கங்கையந்தாதியிலும் தரைக்கீழ் அமிழ்ந்த மலையில் கிணறு தோண்டி வருந்தியதாகப் பாடுகின்றார்.

**தறையோர் இகழத் தொடுங்கிணற்றில்**
**தண்ணீர்ப் பெருகித் தனிப்புகழ்ச்சீர்**
**நிறைவார்ந் திடப்பெற் றிலனாகின்**
**நின்னாள் எனும்சொல் நிசம்படுமோ**
**பிறைவாழ் சடிலத் தான்நுதற்கண்**
**பெறும்பா லகனே பிழைதவிர்ந்த**
**மறைஆக மத்தின் பொதுக்குருவா**
**வருவாய் கழுகு மலையானே!** 11

(இ-பொ.):- செஞ்சடையில் பிறைநிலவைச் சூடிய சிவபெருமான் தன் நெற்றிக்கண்ணில் சுடரால் பெற்ற திருமகவே! குற்றமற்ற வேதமும் ஆகமங்களும் தொழும் பொதுவான குருநாதனாக வருபவனே! கழுகுமலை அமர்ந்த பிரானே! இப்புவி மக்கள் பலரும் இகழ்ந்திருக்க, அடியேன் தோண்டும் கிணற்றில் தண்ணீர்ப் பெருகி ஒப்பற்ற புகழடைந்து மன நிறைவை அடைய வேண்டும். அவ்வாறு நிகழாவிட்டால் அடியேன் உன்னடிமை என்னும் சொல் பொய்யாகிடும் அன்றோ. (எ.று.)

(வி-ம்.):- தனிப் புகழ்சீர் நிறைவு : முன் இகழ்வோரும் பாராட்ட வேண்டும் என்பது குறிப்பு. 'தூர்த்தர் சொல் நிந்தைக் கனல்சூழ்ந்து என்நெஞ்சைச் சூடுகின்றதே' எனக் கங்கையந்தாதி யிலும் சுவாமிகள் பிறர் தம்மைப் பழிப்பதை எடுத்துரைப்பார்.

மேலும் தாம் தொடும் கிணற்றில் நீர்பெருகாமைக்கு மிகவும் மனம் வருந்திப் பல பதிகங்களைப் பாடியுள்ளார் சுவாமிகள்.

எனவே அவருடைய மனக்கவலை நீங்கி மனம் நிறைவு அடைய வேண்டுமெனில், முருகன் ஏவலால் தோண்டிய கிணற்றில் நீர் பெருகிடக் காண வேண்டும் என்னும் விருப்பத்தையும் நிறைவார்தலாகக் குறித்தார் எனலாம். *(தரை-நிலம், புவி; சடிலம்-சடை).*

**வல்லிக் கொடிநேர் அரமகளிர்**
**மகிழ்சீர்க் கழுகு மலையானைக்**
**கல்லிற் கிணறொன்(று) அகழ்ந்துழலும்**
**கழைமால் வனத்துக் கவுமாரன்**
**நல்லிக் குறழும் நீருற்று நனிபெற்(று)**
**உவப்பான் நறுந்தமிழால்**
**சொல்லித் துதிக்கும் இவைகற்போர்**
**துயர்தீர் பரம சுகத்தினரே!** 12

(இ-பொ.):- வல்லிக்கொடி போன்ற தேவமகளிர் தொழுது மகிழும் பெருமையை உடைய கழுகுமலையில் அமர்ந்த கழுகாசல மூர்த்தியை, பாறையில் கிணற்றைத் தோண்டி வருந்துகின்ற மூங்கில் வனமெனும் திருநெல்வேலியில் வாழும் கௌமார நெறியினனாகிய முருகதாசன் நல்ல கங்கையொத்த நீருற்று அடைந்து மகிழ வேண்டும் என்ற விருப்பத்தால் மணமுடைய தமிழ்ப் பாமாலையாகப் பாடித்துதித்தனன். அவ்வாறு பாடிய பாக்களைக் கற்போர் துன்பமற்ற மேலான சுகமாய பேரின்பத்தை அடைவர்.

*(கழை-மூங்கில்; நல்லி-பெண், இங்கு நீர்த் தெய்வமாகிய கங்கை).*





## கழுகுமலைப் படைவீட்டுத் திருப்புகழ்

*கொடியமத வேள்சொரியும் மலர்கடுவ தால்மகளிர்*
*குசபுளகம் மீதுமயல் பெருகாதே*
*கொடைஅறிகி லாதமுழு மடையர்மிசை பாடிஅவர்*
*குறுகும்வழி தோறும்நிதம் அலையாதே*
*பொடியணியும் மேனியொடு திரியுமுனி வோர்பனுவல்*
*புகலு(ம்)நெறி யேபெருக விடுமாறே*
*புலவர்மக ளோடும்எழில் மறவனிதை யோடும்இரு*
*பொழுது(ம்) மயில் ஏறிநிதம் வருவாயே!*
*நெடியதிரு மால்அவுணர் குலகலக மேகம்மிக*
*நினைவுறுது ரோபதிதன் மனமேபோல்*
*நிமிடம்அருள் கூர்வரதன் அமரருடன் ஓதுபுகழ்*
*நிறையும்அறி வாளரொடு தினம்வாழ்வாய்*
*கடியநம ராயன்உயிர் மடியமுனி வார்தமது*
*கனல்விழியி னூடொரு புதல்வோனே*
*கதலிகுலை சாயஉதிர் பழமதுவின் ஆறுமலி*
*கழுகுமலை மீதுவளர் பெருமானே!*

(இ-பொ.):- நெடியோனாகிய திருமால் அரக்கர் குல அழிவினைக் கருதும் மேகவண்ணன் ஆவான். தன்னை மனத்தில் மிகுந்த பக்தியுடன் திரௌபதி நினைத்த நிமிடத்தில் அருளைப் பொழிகின்ற வரதன் ஆவான். அத்தகைய கண்ணனும் ஏனைத் தேவர்களுடன் பாராட்டும்படி நிறைந்த ஞானிகளுடன் நாளும் உறைபவனே! கடுமையான எமராசன் மடியுமாறு சினங்கொண்ட சிவபெருமானின் சுடர்விழியில் அவதரித்த திருப்புதல்வனே! வாழையின் குலைசாய்ந்து விழ உதிர்கின்ற பழங்களின் சாறு ஆறாகப் பெருகி ஓடும் கழுகுமலையில் அமர்ந்த பெருமானே!

அடியவர்க்குக் கொடியவனான மன்மதன் வீசுகின்ற மலரம்புகள் சுடுவதால் பெண்டிர் அங்கங்களில் ஆசையுற்றுப் பெருகும் மயக்கத்தால் மனம் அலையாமலும் கொடுத்து அறியாத தமிழ்ச்சுவை அறியாத மடையர்களைப் பாடி அவர் செல்லும் வழிகளில் எதிர்ப்பட்டு ஏங்கி அணுகாமலும் அடியேன் விளங்க வேண்டும். எனவே நீறணிந்த மேனியரான முனிவர்தம் நூல்கள்

கூறும் நன்னெறி வழியே என்மனம் செல்லும் வகையில் வானவர் மகளாகிய தெய்வயானையுடனும் மறக்குல குறமகளாகிய வள்ளியுடனும் இருபொழுதும் மயிலில் வந்து காட்சி தந்தருள்க.

(வி-ம்.):- 'பத்தர்க்கு ரதத்தைக் கடவிய பச்சைப் புயல்' என்றவாறு திருமாலின் செயல்களை ஆங்காங்கு அருணகிரிநாதர் குறிப்பதுபோல இவரும் இந்தத் திருப்புகழில் திரௌபதி நினைத்தவுடன் சேலை பெருகுமாறு அருள்புரிந்த திருமாலைச் சுட்டுகின்றார். கலகமேகம் - வஞ்சனை செய்யும் மேகவண்ணன் கொடை.......குறுகாதே : அக்காலப் புலவர் நிலையை நினைந்து கூறியது.

குன்றுங் குழியும் குறுகி வழிநடப்பது
என்று விடியுமெமக் கெங்கோவே - ஒன்றும்
கொடாதானைக் கோவென்றும் காவென்றும் கூறில்
இடாதோ நமக்கிவ் விடி.

என இரட்டைப்புலவர்களும் கொடாதவர்களைப் பாடும் நிலையை எண்ணி வருந்துவர்.

**புலவர் மகள்** : தெய்வயானை, புலவர் - தேவர்கள். இருபொழுதும் - இரவு பகல் என இருபொழுதும்; கனவு நனவு என இரண்டை அடையும் பொழுதும் என்றும் குறிக்கலாம். நமராயன் - எமனாகிய ராசன்.





# மகான் "வண்ணச்சரபம்" தண்டபாணி சுவாமிகள்
(1839-1898)

